# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 114/மாநகராட்சி/2021**

**நாள் : 07.03.2022**

திரு. C.ராஜமாணிக்கம்,
கோயம்புத்தூர் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி
கோயம்புத்தூர் – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர், அசோகர்வீதி, எண்.74 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C.ராஜமாணிக்கம் அவர்களின் 14.07.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.07.2021-ல் பெறப்பட்டு 114/மா/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாராரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர், அசோகர்வீதி, எண்.74 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C.ராஜமாணிக்கம் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

1. ஆவண எண்.2292/2020 (03.06.2020) கோயம்புத்தூர் மாநகரம் – 641023, போத்தனூர் நாகபத்ரகாளியம்மன் கோவில் எதிர்புறம், பாரதிநகர், கதவு எண்.17–A வீட்டில் வசிக்கும் திரு. சுரேஷ் குமார் மனைவி திருமதி.வித்யா

என்பவருக்கு பட்டா எண் மற்றும் எந்த விவரமும் இன்றி ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. சொத்து விவரம் அயிட்டம் . 1 – தென்புறம் கிழமேல் அடி 35அடி, ஆனால் 35 அடியில் கட்டிடம் கட்டிக்கொண்டு கிழமேலாக சுமார் 55அடி நீளம் தென்வடல் இட்டேரியையும் சேர்த்து கிழமேலாக மதில் சுவர் கட்டப்பட்டுள்ளது.

3. அயிட்டம்–2 – 9 அடி அகலம் 40 அடி நீளம் பத்திரப்படி பாத்தியப்பட்ட மாமூல் வழித்தடத்திற்கு பதிலாக சுமார் 14 அடி அகலத்தில் பக்கத்து எனது வழி தடத்தையும் சேர்த்து மதில் சுவர் கட்டி இரும்பு கதவும் போட்டுள்ளார்.

4. சட்டத்திற்கு புறம்பாக கட்டிட அனுமதிக்குஅதிகம் சட்ட விதிகளை மீறி கட்டிடம் கட்டியுள்ளார்.

மேற்படி குறைகளை ஆய்வு செய்து தனக்கு மற்றும் ஊர் பொதுமக்களுக்கு நியாயம் கிடைக்க ஆவனம் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை கோரி கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற 24.11.2021 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரிடமிருந்து எவ்வித அறிக்கையும் இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்படவில்லை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவ 03.01.2022 நாளிட்ட கடிதம் மூலம் 10.01.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி நகரமைப்பு அலுவலர் 10.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" மனுதாரர்திரு.சி.ராஜமாணிக்கம் என்பவர் தனது வீட்டிற்கு அருகில் வசிக்கும் திருமதி.வித்யா என்பவர் தனது வழிதடத்தையும் சேர்த்து மதில் சுவர் மற்றும் கதவு அமைத்துள்ளதாக புகார் தெரிவித்து, தனது வீட்டையும், மேற்கண்ட திருமதி.வித்யா என்பவரின் வீட்டையும் அளந்து தருமாறு கோயம்புத்தூர் மாநகராட்சியை கேட்டுக் கொண்டார்.

கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி கிராமம், கோனைவாய்க்கால் பாளையம் (வார்டு எண்.99) பொங்காளி புதூரில் நத்தம் புதிய எண். க.ச.502/9 ல் (பட்டா எண். 3977) அமைந்துள்ள மேற்கண்ட திரு. ராஜமாணிக்கம் என்பவரின் வீட்டை மாநகராட்சியால் 08.01.2022 அன்று அளவீடு செய்யப்பட்டது. ஆனால் திரு.இராஜமாணிக்கம்

கேட்டுக்கொண்டவாறு அவரது வீட்டிற்கு பக்கத்து வீட்டின் உரிமையாளர் திரு.சுரேஷ்குமார் என்பவரின் மனைவி திருமதி.வித்யா என்பவரின் வீட்டை மாநகராட்சி அலுவலர்களால் அளவீடு செய்யடப்படவில்லை. மேற்கண்ட இருவருக்கும் பாத்தியப்பட்ட இடங்களை மீண்டும் அளவீடு செய்து அதன் விவரத்தை இம்முறை மன்றத்தில் இன்னும் 15 நாட்களில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் 10.01.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவர் இம்முறைமன்ற நடுவத்திடம் தனக்கு வேறு ஒரு நாளில் விசாரணை கோரியுள்ளதின் அடிப்படையில், அவருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக 24.02.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 01.02.2022 நாளிட்ட கடிதம் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

திரு.சி.ராஜமாணிக்கம் 24.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சி கிராமம் கோனைவாய்க்கால் பாளையம் பொங்காளி புதூரில் சர்வே எண்.502ல் அமைந்துள்ள எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசிக்கும் திருமதி. வித்யா என்பவர் பொதுப்பாதையை ஆக்கிரமித்து தனது வீட்டை கட்டியுள்ளார். வீட்டின் Gate–ஐயும் பொது இடமான சாலையோரத்தில் அமைத்துள்ளார். ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தை சுட்டிக்காட்டி மேற்கண்ட வித்யா என்பவரின் வீட்டை அளக்குமாறு மாநகராட்சி அலுவலர்களிடம் கோரிய போது மாநகராட்சி அலுவலர்கள் உங்களுக்கு ஏதும் இதனால் பிரச்சினை இல்லையே என தெரிவித்து, அங்குள்ள மற்றொரு பாதையை நீங்கள் உபயோகப்படுத்துங்கள் என தெரிவித்துவிட்டு சென்று விட்டனர். எனவே மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள புறம்போக்கு இடத்தை மீட்கும் பொருட்டு திருமதி.வித்யா என்பவருக்கு சொந்தமான வீட்டினை அளந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்து இது தொடர்பான Sketchஐ இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் எதிர்மனுதாரர் 10.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் தெரிவித்தவாறு 15 தினங்களுக்குள் சம்மந்தப்பட்ட இடங்களை மீண்டும் அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதாக தெரிவித்திருந்தார். அறிக்கை எதுவும் பெறப்படாத நிலையில் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தால் 03.02.2022 நாளிட்ட நேர்முகக்கடிதம் அனுப்பப்பட்டது.

24.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் செயற்பொறியாளராக பணிபுரியும் திருமதி.கருப்பாத்தாள் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி கிராமம் கோனைவாய்க்கால் பாளையம் பொங்காளி புதூரில் சர்வே எண்.502–ல் அமைந்துள்ள திருமதி.வித்யா என்பவர் மாநகராட்சி பொது இடத்தை ஆக்கிரமித்து தனது வீட்டின் gateஐ கட்டியது தொடர்பாக அவ்வீட்டினை பார்வையிட்டும், உரிய ஆய்வினை மேற்கொண்டும் ஆக்கிரமிப்பு பகுதிகளை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மேலும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை இன்னும் 1 மாத காலத்தில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி நகரமைப்பு அலுவலர் மற்றும், கோயம்புத்தூர் மாநகராட்சி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

இந்நேர்வில் மனுதாரர் திரு.சி.ராஜமாணிக்கம் தனது வீட்டிற்கு அருகில் வசிக்கும் திருமதி.வித்யா என்பவர் தனது வழித்தடத்தையும் சேர்த்து மதில் சுவர் மற்றும் கதவு அமைத்துள்ளார் என்றும் தனது வீட்டையும், திருமதி.வித்யா வீட்டையும் அளந்து ஆக்கிரமிப்பை அகற்றித்தருமாறு மாநகராட்சிக்கு மனு கொடுத்ததாக மாநகராட்சி உதவி நகரமைப்பு அலுவலர் 10.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் தெரிவித்துள்ளதோடு, திரு.ராஜமாணிக்கம் என்பவரின் வீடு மாநகராட்சியால் 08.01.2022 அன்று அளவீடு செய்யப்பட்டது. இருவருக்கும் பாத்தியப்பட்ட இடங்களை மீண்டும் அளவீடு செய்து 15 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதாக உதவி நகரமைப்பு அலுவலர் தெரிவித்திருந்தார். ஆனால் எவ்வித அறிக்கையும் கோயம்புத்தூர் மாநகராட்சியிடமிருந்து பெறப்படாத நிலையில் முறைமன்ற நடுவர் அவர்களால் 03.02.2022 நாளிட்ட நேர்முக கடித எண்.479/மா/2021 மூலம் அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்ட பின்பும் எவ்வித மேல் நடவடிக்கையும் மாநகராட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்படவில்லை. இதனை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. சம்பந்தப்பட்ட உதவி நகரமைப்பு அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

24.02.2022 அன்று நேரடி விசாணையில் ஆஜரான மாநகராட்சியின் செயற்பொறியாளர்(திட்டம்) அவர்கள் ஆக்கிரமிப்பு உள்ளது என்பதை ஏற்றுக்கொண்டு சர்வே எண். 502–ல் திருமதி.வித்யா என்பவர் மாநகராட்சியின் பொது இடத்தை ஆக்கிரமித்து தனது வீட்டிற்கு கேட்(gate) அமைத்து தொடர்பாக அந்த இடத்தினை பார்வையிட்டு ஆய்வினை மேற்கொண்டு ஆக்கிரமிப்பு பகுதிகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளவாறு ஒரு மாத காலத்திற்குள் சம்மந்தப்பட்ட இடத்தினை நேரில் ஆய்வு செய்து சட்டவிதிகளின்படி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கையினை எடுப்பதற்கு

மாநகராட்சி பொறியாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மாநகராட்சி ஆணையர் இதை உறுதிபடுத்த ஆணையிடப்படுகிறது.

**2022**-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. C.ராஜமாணிக்கம்,
   74, அசோகர் வீதி,
   வெள்ளலூர் அஞ்சல்,
   கோயம்புத்தூர் – **641 111.**

2. ஆணையர்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   ராஜா வீதி, டவுன் ஹால்,
   கோயம்புத்தூர் – **641 001.**

3. இணை இயக்குநர்,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – **600 028.**

**நகல்**
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்